**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 88** **நாள் : 30.04.2024**

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோடம்பாக்கம் மண்டலத்தில் ரூ.35.40 இலட்சம் மதிப்பில் முடிவுற்ற திட்டப்பணியினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, ரூ.6.58 கோடி மதிப்பில் புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டிப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.**

இன்று (30.04.2025) மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள், கோடம்பாக்கம் மண்டலம், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில், வார்டு-142, ஜோன்ஸ் சாலை சென்னை தொடக்கப் பள்ளி வளாகத்தில் சிட்டீஸ் திட்டத்தின் கீழ்(CITIIS) ரூ.5.75 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்படவுள்ள தரைத் தளம் மற்றும் மூன்று அடுக்குகளுடன் கூடிய புதிய பள்ளிக் கட்டடப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்து, இதற்கான திட்ட வரைபடத்தினைப் பார்வையிட்டு அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

முன்னதாக மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், கோடம்பாக்கம் மண்டலம், சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில், வார்டு-139, அண்ணாமலை நகர், 3வது தெருவில் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.35.40 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட குழந்தைகள் மையக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்து, அதன் அருகில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ரூ.33 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள பல்நோக்குக் கட்டடப் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

பின்னர் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், கோடம்பாக்கம் மண்டலம், வார்டு – 139, கங்கையம்மன் கோயில் தெருவில் மாமன்ற உறுப்பினர் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.50 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்படவுள்ள ஆண்களுக்கான நவீன உடற்பயிற்சிக் கூடம் கட்டும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார்.

இதன் தொடர்ச்சியாக வார்டு 142, வீ.வீ. கோவில் தெருவில் ரூ.4 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூட கட்டுமானப் பணிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து பணிகளை தரமாகவும், விரைவாகவும் முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சிகளில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், மண்டலக்குழுத் தலைவர் திரு.எம்.கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் திரு.ப. சுப்பிரமணி, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**